# கொங்கு

ஆசிரியர்:
புலவர் செ. இராசு

புரட்டாசி 2005 | 1974 செப்டம்பர்



நொய்யல் படுகையில் கல்மரம்

30 காசு

அறிவியல் வரலாற்றுத் திங்களிதழ்

# தேனீ

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ

தேனடை 4 15—9—74 தேனீ 9


## வணக்கம்

இலங்கையில் ஒரு இந்தியத் தூதரகம் கொழும்பில் உள்ளது. இந்தியாவில் வெளியாகும் நூல்கள் அந்தத் தூதரக நூலகத்தில் எதிர்பார்ப்பது நியாயம்தானே! அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டால் இந்தியப் புத்தகங்கள் இறக்குமதி ஆவதில்லை. தமிழ் நூல்களைப் படிக்க விரும்பும் இலங்கைத் தமிழர்கள் இந்தியத் தூதரக நூலகத்தை நாடுகின்றனர். ஆனால் அங்கு இந்தி நூல்கள் சேர்க்கப்படுவது போல தமிழ் நூல்கள் சேர்க்கப்படுவதில்லை. இந்தஅவல நிலையை எண்ணி இலங்கை ஏடான 'சுதந்திரன்' வருத்தம் தெரிவித்துள்ளது.

இக்குறையைப் போக்க தமிழர்களாகிய நாம் என்ன செய்யலாம்? தமிழ் நூல்களை வாங்கி அளிக்குமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளலாம். தமிழ்நாடு அரசு நிதிஒதுக்கீடு செய்து, தமிழர்வாழும் பிற நாட்டின் இந்தியத் தூதரக நூலகங்களுக்கு நூல்களை அனுப்பி வைக்கலாம்.

இவை நிறைவேறும் வரை, நாம் காத்திருக்க வேண்டியதில்லை. புத்தகம் வெளியிடுவோர், இதழ்கள் நடத்துவோர் ஒவ்வொரு படியினை இலவசமாக இலங்கை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக நூலகத்திற்கு அனுப்பி வைப்போம். அவற்றைப் போற்றிப் பாதுகாத்து நூலகத்தில் வாசகர்க்குத் தரவேண்டியது நமது தூதரின் கடமை.

—ஆசிரியர்.

# பண்டைய நில விற்பனை முறைகள்

நடன. காசிநாதன், எம். ஏ.
பழங்கலைப் பதிவு அலுவலர், தஞ்சை.

## பலமுறையில் நில விற்பனை :

நில விற்பனையை பல சூழ்நிலைகளின் காரணமாகப் பல விதங்களில் நமது முன்னோர் நடத்தியிருக்கின்றனர். நிலத்தின் சொந்தக்காரர் தமது நிலத்தை விற்பதும் அதை மற்றொருவர் வாங்குவதும் பொதுவான முறை. இந்தப் பொதுவான முறையில் மட்டும் அல்லாது நிலத்தைப் பொதுவில் ஏலத்தில் விட்டு அதை ஒருவர் அதிக விலையில் ஏலம் (Auction) கேட்டும் வாங்கி யிருக்கின்றனர். மற்றொரு முறை மிகவும் வியப்பானதாக இருக்கிறது. அதாவது ஒருவர் ஒரு நிலத்தைத் தாம் வாங்குவதற்குப் பதிலாகப் பிறர் ஒருவரின் பெயரில் நிலத்தை வாங்கியிருக்கிறார். அந்த முறைக்கு ‘ அந்நிய நாமகரண நில்விலை’ என்று கல்வெட்டு கூறுகிறது. வேறொரு முறை ‘ கற்பூர விலை என்று வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறைக்கும் ஒவ்வொரு கல்வெட்டை உதாரணமாக எடுத்துக்கொண்டு பார்க்கலாம்.

## பொது முறை :

முதல் முறைக்குச் சிறந்த உதாரணமாகத் திருவானைக்காக் கோயிலில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டைக் 1 கொள்ளலாம். இக் கல்வெட்டு சோழ மன்னன் மூன்றாம் இராசராசனின் காலத்தில் பொறிக்கப்பட்டதாகும். பாண்டிகுலாசனி வளநாட்டு, வினைநாட்டைச் சேர்ந்த திருவானைக்காவில் உள்ள கோவிலில் திருவெண்ணாவல் நிழலின்கீழ் இனிது அமர்ந்தருளிய திரிபுவனபதிக்கு மூலப்ருத்யராகிய ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு ராஜராஜ வள நாட்டுப்பாச்சிற் கூற்றத்தில் உள்ள கீழ்ப்பாலாற்றைச் சேர்ந்த வாளாடிஎன்னும் ஊரில்வாழும் சிலம்பன் பிச்சதேவன் என்பான் தமது நிலத்தை விற்பனே செய்ய ஒப்புக்கொண்டு முதலில் நிலவிலேப்ரமான இசைவு தீட்டு (Receipt of agreement of selling his land) எழுதித் தருகிறான்.

1. S. I. I. Vol. IV, No. 424

## நிலவிலைப்ரமாண இசைவுத் தீட்டு.

நிலவிலைப்ரவாண இசைவுத் தீட்டு என்பது நிலவிலை ப்ரமாணத்துக்கு (Registration of the sale of land) ஒரு முன்னோடி. ஒரு உறுதிச் சீட்டு. அந்த உறுதி அல்லது ஒப்பந்த சீட்டில் சிலம்பன் பிச்சதேவன் தனக்கு அந்த நிலம் எப்படி கிடைத்தது என்பதையும் அதனுடைய நான்கு பக்க எல்லைகள், மொத்த நிலத்தின் பரப்பு, அதற்கான விலை ஆகிய அனைத்தையும் கூறிவிட்டு, எதிர்காலத்தில் அதற்கொரு வில்லங்கம் (குத்துக்கால்) ஏற்பட்டால் அதைத் தாமே தீர்த்து வைப்பதாகவும் உறுதிகூறி எழுதித் தருகிறான்.

## யார் யாரிடமிருந்து நிலத்தைப் பெற்றான்:

சிலம்பன் பிச்சதேவன் செம்பியன் கூற்றிலுள்ள அனைத்து நிலங்களையும் விலையாக விற்றுத்தருகிறுன். அந்நிலங்களை அவன் செம்பியன் கூற்றூர் கிழவன் சீயாருதேவன் திருவானைக்காவுடையான், அவன் தம்பி திருநட்டப்பெருமான் கூற்றூர் கிழவன் ஆதித்த தேவன் கூத்தன், கூற்றூர் கிழவன் திருப்பூவணமுடையான் ஆதித்த தேவன், கூற்றூர் கிழவன் உடைய பிள்ளை சொக்க ஞான சம்பந்தன், அவன் தம்பி சீயாருதேவன், கூற்றூர் கிழவன் அவயம்புக்கான் திருநட்டப்பெருமான் ஆகியோரிடமிருந்து விலைக்கு வாங்கியிருக்கிறான்.

## நிலத்தின் எல்லை:

அந்நிலத்தின் நான்கு பக்க எல்லைகளும் குறிக்கப்பட்டுள்ளன. கிழக்கெல்லையாவது பைங்கணி, பிராய்க்குடி, குமாரங்கலம் ஆகிய ஊர்களின் எல்லைகளுக்கு மேற்கு; தெற்குப்பக்க எல்லை கீரமங்கலம், இலத்துவாணியச் சேரி ஆகிய ஊர்களின் எல்லைக்கு வடக்கு; மேற்கு பக்க எல்லை பங்கயச் செல்வி நல்லூர், ஆளப்பிறந்த நல்லூர் பேரூர்; சிறுதவூர் ஆகிய ஊர்களின் எல்லைக்குக் கிழக்கு; வடக்கு எல்லை நின்றியூர் எல்லைக்குத் தெற்கு. அத்தோடு இவ்வூரைச் சேர்ந்த நிலம் புறவூரில் இருந்தால் அதுவும் இந்நிலத்தோடு சேர்க்கப்படவேண்டும் என்றும் புறவூரைச் சேர்ந்த நிலம் இவ்வூரில் இருந்தால் அது நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## மொத்தப் பரப்பும் அதன் விலையும்:

நிலத்தின் மொத்த பரப்பு முப்பத்து மூன்றே முக்காணிக் கீழ் அரையே இரண்டு மா. அதற்கான விலை அன்ராடு நற்காசு (Coins that are current in those days) பதினாராயிரத்து ஐநூற்று இருபது ஆகும். இவற்றையெல்லாம் கூறிவிட்டு பின்னல் கூறியிருப்பதுதான் மிகவும் முக்கியமானதாகும்.

"இக் காசு பதினாராயிரத்தைஞ்ஞூற்றிருபதும் ஆவணக்களியே காட்டேற்றிக் கைச் செலவறக் கொண்டு விற்று விலைப்ரமான இசைவு தீட்டுக் கொடுத்தேன் ஆதிசண்டேஸ்வர தேவற்கு இந்த வாளாடி உடையான் சிலம்பன் பிச்சதேவன்...இக்காசு பதினாராயிரத்தைஞ் நூற்றிருபதுமே விலைபாகவும் இதுவே பொருள் மாவறுதிப் பொருட் செலவோலைபாவதாகவும் இதுவல்லது வேறு பொருள் மாவறுதிப் பொருட் சேலவோலை காட்டக்கடவதல்லாத தாகவும்...2 என்று தொடர்ந்து கூறப்பட்டுள்ளது.

## பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை;

இதுவே பொருள் மாவறுதிப் பொருட்செலவோலையாவதாகவும் என்பது இந்தநிலவிலைப்ரமாண இசைவுதிட்டே, பொருள் மாவறுதிப் பொருட் செலவோலையாகக் கொள்ளுதல் வேண்டும் என்பதாகும். நிலவிலைப்ரமாண இசைவு தீட்டு என்ன என்று மேலே கூறப்பட்டுள்ளது. பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை என்பது (Deed of exchanging cash for the bject) ஒரு பொருளுக்கு இவ்வளவுதான் விலை என்று நிர்ணயித்து அதை எழுதித் தரும் ஓலையாகும். எனவே இதைப்போன்றதொரு தனியான ஓலை தேவையில்லை, அந்த நில விலை ப்ரமாண இசைவுத்திட்டே போதுமானது என்று கருதப்பட்டுள்ளது. அத்தோடு,

'இந்நிலத்துக்கும் இந்நிலத்தால் வந்த ப்ராத்திகளுக்கும் திருவாய் மலர்ந்தருளியபோதே பிரமாணம் பண்ணிக் குடுக்க கடவேனாகவும் குடுத்திலேனேயாகில் இந்தப்ரமாண இசைவுதீட்டேபிரமாணமாவதா கவும் இப்படி சம்மதித்து விலைக்கறவிற்றுப் பொருளறக்கொண்டு விற்று விலை ப்ரமாண இசைவு தீட்டு குடுத்தேன்' என்று தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது.

## ப்ரமாணம் (Registration)

இந்நிலத்தை வாங்கிய ஆதிசண்டேஸ்வர தேவர் எப்பொழுது வேண்டும் என்று கூறுகிறாரோ அப்பொழுதே ப்ரமாணம் பண்ணிக் கொடுப்பேன் என்று விற்பவன் உறுதியளிக்கிறான். ப்ரமாணம் பண்ணித்தருதல் என்பது இன்றைய பதிவுசெய்து தருதல் (Registration) போன்றது ஆகும். அவ்வாறு பிரமாணம் செய்து தரவில்லையென்றால் நிலவிலை ப்ரமாண இசைவு திட்டையே அத் தாட்சியாக வைத்துக்கொண்டு அவ்வுடமையை ஆண்டுவரலாம்என்று உறுதி கூறுகிறான்.

மேலே கூறப்பட்டவைகளிலிருந்து நமக்கு ஒன்று புலனாகிறது. அதாவது ஒரு நிலத்தை விற்பனை செய்யவேண்டுமெனில் முதலில் நில

விலை ப்ரமாண இசைவு தீட்டு எழுதவேண்டும் என்பதும், பின்னர் பொருள் பாவறுதி பொருட் செலவோலை தரவேண்டும் என்பதும். பின்னர் இறுதியாக ப்ரமாணம் பண்ணித் தருதல் வேண்டும் என்பதும் ஆகும்.

## சிவன் கோயிலுக்கு நிலம் விற்றல்

மற்றொன்று சிவன் கோயிலுக்கு நிலம் விற்பனை செய்தால் சண்டேஸ்மரசுவாமி பேரில் தான் விற்பனை செய்யப்படும் என்பது இக் கல்வெட்டினாலும் வேறு சில கல்வெட்டுகளினாலும் தெரியவருகின் றன. பெருமாள் கோயிலுக்கு நிலம் விற்பனை செய்தால் ஸ்ரீ ஸேநா பதிப் பெயரில் [1] விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

## கையொப்பம் :

இறுதியில் அவ்விசைவுத் தீட்டை எழுதியவனின் கையொப்பம் 'பணியால் இந்த நிலவிலை ப்ரமாண இசைவு தீட்டு எழுதினேன் இவ்வூர் மத்யஸ்தன் மாதான மங்கலமுடையான் நேர்பொலிய நின்றான் பஞ்சனெதிபாஞன் இவை என் எழுத்து' என்று பொறிக்கப் பட்டுள்ளது. அதையடுத்து நிலத்தை விற்பனை செய்த வாளாடி உடையான் சிலம்பன் பிச்சதேவனின் கையெழுத்தும், சிலம்பன் பிச்ச தேவன் யாரிடமிருந்து அந்நிலத்தை வாங்கினானோ அவர்களின் கையெழுத்துக்களும், மற்றும் சில நாட்டுத் தலைவர்களின் கையொப் பங்களும் காணப்படுகின்றன.

## ஏலத்தின் மூலம் நிலம் விற்பனை (பெருவிலை);

இதுவரையில் கூறிவந்தவை பொதுவான முறையில் நிலவிற்பனை செய்துவந்த முறை-எல்லார்க்கும் பொதுவில் ஏலம் விட்டு நிலம் விற் பனை செய்யும் முறையை மற்றொரு கலவெட்டின் துணைகொண்டு காணலாம். காஞ்சிபுரத்திலுள்ள அருளாளப் பெருமாள் கோயிலின் தாயார் சன்னதியின் நுழைவாயிலில் வலதுப்பக்கத்தில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது[2]. கல்வெட்டு விஜயநகர மன்னர் வீரகம்பண உடையார் காலத்தில் அதாவது சக ஆண்டு 1288-இல் (கிபி 1366) எழுதப்பெற்றிருக்கிறது. ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நகரமான காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திருவத்தி யூரில் நின்றருளும் பெருமாள் கோயிலில் தாதிச்சிகளாய்ப் [3] பணிபுரி வாரில் அக்கச்சி மகள் முதலியர் நாச்சியார் ஆன எல்லாந்தலையான

1. S. I. I. Vol. IV, No. 504
2. S. I. I. Vol. IV. No. 356
3. தாதிச்சிதான் பிற்காலத்தில் தாசி என்று மருவியதுபோலும்.

பெருமாள் அருளாளப் பெருமாள் கோயிலில் திருப்புறக்கொடையாக அளித்துத் தாம் காணியாட்சியாக அனுபவித்தவரும் இரண்டு கோல் அளவுள்ள மனையைக் 'கொள்வார் யாரேனும் உளரோ என்று கூற இம்மொழி கேட்டு எதிர்மொழி கொடுத்தோன் ஆபஸ்தம்ப ஸூத்ரத்து பாரத்வாஜ கோத்திரத்து அண்ணர் கொப்பண்ணங்கள் பிள்ளைகளில்ஐயண்ணங்களென். விலைகுறித்தால் கொள்வேன்என்று கூற, முற்கூறிய முதலியார் நாச்சி ஆன எல்லாந்தலையான பெருமாள் தாசியும்பிற்கூறிய அண்ணர் கொப்பணங்கள் மகனார் ஐய்யணங்களும் எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றுடு நடக்கும் வாசிப்படா நற்பணம் உயள'' (27) என்று ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

## ப்ரமாணம் செய்வதில் விரைவு :

இக் கல்வெட்டில் மனையை விற்பவர் எல்லாருக்கும் பொதுவில் வந்து தம் மனையைக் கொள்வார் (வாங்குவார்) யாரேனும் உளரோ என்று வினவுகிறுள். அப்பொழுது ஒருவர் '‚ன்ன விலை என்று தெரிவித்தால் வாங்குவேன்' என்று அறிவிக்கிருர். பிறகு இருவரும் ஒரு விலைக்குச் சம்மதிக்கின்றனர். இம்மாதிரி எல்லாருக்கும் மத்தியில் தற்காலத்தில் ஏலம் விடுவதைப் போன்று கேட்டு பின்னர் விற்பதைக் கல்வெட்டுகள் பெருவிலை என்று கூறுகின்றன. இம்மாதிரி விற்பனை செய்தால் நேரே விலை ப்ரமாணம் செய்துவிடுகிறார்கள். இத்தகைய விற்பனையில் நிலவிலை ப்ரமாண இசைவு தீட்டு பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை ஆகியவை தேவைப்படவில்லை. இது எதைக் காட்டுகிறது எனில் ஏலத்தில் விற்பவன் உடனே காசைப் பெற்றுக் கொள்கிறான். அதைப்போன்று உள்ளது. ஏனெனில் காலம் கடந்தால் இன்ன விலைக்கு வாங்குகிறேன் என்று கூறியவன் வாங்க மறுத்தாலும் மறுக்கலாம் விற்பவனும் வேறு விலையை எதிர்பார்க்கலாம். இவ்விலைதிடீரென்று கேட்டவிலைதானே, எனவே காலத்தைக்கடத்தாது நேராக ப்ரமாணம் செய்து கொடுத்துவிடுகின்றனர். ஆனல் இத்தகைய விற்பனையிலும் விற்கும் பொருளுக்கு ஏதேனும் கலம் இருந்தால் (வில்லங்கம் இருந்தால்) அதை விற்பவர் தீர்த்துத் தருவதாக உறுதியளிக்கிருர்,

## அந்நிய நாமகரணத் தீட்டு :

மூன்றாவது முறையில் நிலத்தைக் காசுகொடுத்துவாங்குபவர் ஒருவராகவும் நிலத்தைச் சொந்தமாக்கிக்கொள்வது வேறொருவராகவும் காணப்படுகிறது. இவ்வகைக்கு உதாரணமாகத் தில்லை நடராசப் பெருமான் கோயிலில் இரண்டாம் திருச்சுற்றில் காணப்படும் கல்வெட்டைக் காட்டலாம். இக் கல்வெட்டு சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இராஜாதிராஜ வள

1. S. I. I. Vol. IV, No. 226

நாட்டுத் தனியூர், பெரும் பற்றப்புலியூர் வாச்சியன் திருச்சிற்றம்பலமுடையான் சங்கரநான தென்னவன் பிரமாயராயன் என்பான், இராஜேந்திர சோழரான சுங்கந்தவிர்த்தருளின குலோத்துங்க சோழ தேவர் மகளார் அம்மங்கையாழ்வாரான பெரிய நாசசியார்க்கு அந்நிய நாமகரணத்திட்டு எழுதித் தந்திருக்கிறான். அவ்வாறு அந்நிய நாமகரணத்திட்டு எழுதும்பொழுது அந்நிலம் அந்நிய நாம கரண விலையால் வாங்கப்பெற்றது என்பதையும் குறிக்கிறான்.

## யார் காசு கொடுத்து, யார் உரிமை பாராட்டுவது:

திருச்சிற்றம்பலமுடையான், இவன் மகன் திருச்சிற்றம்பலமுடையான் நக்கன், மேலும் சிலர் ஆகிய "இவ்வனைவரும் ஆக இவ்விருவரும் பக்கல் அம்மங்கை ஆழ்வார் வாச்சியன் திருச்சிற்றம்பலமுடையான் சங்கரனான தென்னவன பிரமாயராயன், இவர் (அம்மங்கை ஆழ்வார்) தம்முடைய காசையிட்டு, என் பேராலே (தென்னவன் பிரமாயராயன்)" அந்நிய நாமகரணத்தால் விலைக்கு நிலத்தை விற்றிருக்கின்றனர். அதைத்தான் பெற்றுக்கொண்டு தென்னவன் பிரமாயராயன் அந்நிய நாமகரணத் தீட்டு எழுதித் தருகிறான்.

## எதிர்கால விளைவுகளுக்குத் தீர்வு:

இந்நிலம் வாங்குவதற்குக் காசு தந்தது அம்மங்கை ஆழ்வார் ஆனால் தென்னவன் பிரமாயராயன் பெயரில் விலை ப்ரமாணம் எழுதப்பட்டு அனுபவிக்கும் உரிமை தென்னவன் பிரமாயராயனுக்குக் சேர்கிறது. அவ்வாறு சேர்வதால் எதிர்காலத்தில் அந்நிலம் தனக்கே சொந்தம் என்று பிரமாயராயன் உரிமை பாராட்டிவிடக் கூடாதே என்று கருத்தில் கொண்டு பிரமாயராயனிடமிருந்தே அந்நிய நாமகரணத் திட்டு எழுதி வாங்கப்படுகிறது. அத்திட்டின் மூலம் யார் அந்நிலம் வாங்குவதற்குக் காசு தந்தது என்பதையும் தம் பெயரில் அது எவ்வாறு எழுதப்பெற்றது என்பதையும் நன்கு விளக்கி அவன் கையொப்பம் இட்டு தருகிறான். இதன்மூலம் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய தேவையற்ற பிரச்சினைகள் தடுக்கப்படுகின்றன.

## கற்பூர விலை:

மற்றொரு முறையிலும் நில விற்பனை நடந்திருக்கிறது. இதைக் 'கற்பூரவிலை' என்று கல்வெட்டுகள் அழைக்கின்றன. இம் முறையில் நிலத்தை விற்பவர்கள் ஒரு கோவிலைச் சார்ந்த எல்லாருமாகவும் வாங்குபவன ஒருவனாகவும் காணப்படுகின்றனர். இது சில சமயங்களில் மாறுபட்டும் காணப்படலாம். பயிரிடப் படாமல் தரிசாகக் கிடக்கும் ஒரு நிலத்தை ஒருவனிடம் கற்பூர விலைக்குவிற்று, அவனிடம் ஆண்டுக் காண்டு ஒரு குறிப்பிட்ட அளவு நெல்லைப் பெறுவது இம் முறையாகும்.

## மதுரைக் கல்வெட்டு :

மதுரையிலுள்ள சுந்தரேசுவரர் கோயிலில் காணப்படும் வீரபாண்டிய தேவன் காலத்தியக் கல்வெட்டை இம்முறைக்கு எடுத்துக்காட்டாகக் காட்டாகக் காட்டலாம். உடையார் திருவாலவாயுடைய நாயனார் கோயில் பங்காளர் தேவகன்மி மாஹேஸ்வரக் கண்காணி செய்பவர்கள், உடையார் வாதுசெய்தவாரணமுடைய நாயனார் கோயிலைசசேர்ந்த கைக்கோளரில் மாதேவர் அழகிய சொக்கனாரான சுந்தரபாண்டிய கோனார்க்குக்காராண்மைக்காணியாக 'கற்பூரவிலை' கொண்டு விலை ப்ரமாணம் செய்துகொடுக்கிறார்கள். அவர்கள் விலை ப்ரமாணம் செய்துகொடுக்கும் நிலம் 'நெடுங்காலம் வரம்பழிந்து பருமாக் காடாய்க் கிடக்கயால்' அதைக் காராண்மை செய்து காராண்மை காணியாக அனுபவிப்பதற்காக கற்பூரவிலை நிச்சயித்த புதுச்குளிகை பணம் உளருய (250) இந்நிலத்தை வாங்கியவர் எல்லா வித வரிகளையும் செலுத்திக்கொள்ளல் வேண்டும். அத்தோடு முதலாண்டு அவ்வூர் 'பதினெட்டடி கோல்ப்படி மாத்தால் (மா ஒன்றுச்கு) நாற்கலமும் இதனெதிராமாண்டு (இதன் அடுத்த ஆண்டு) மாத்தால் நெல்லறுகலமும், இதன் எதிராமாண்டு நெல்லுப் பதின் கலமும், இதன் எதிராமாண்டு மாத்தால் நெல்லுப் பன்னிருகலமும், இதன்னெதிராமாண்டு முதல் நிலைவரிசை மாத்தால் நெல்லு பதினைங்கலமாக கோயிலுச்கு இறுப்பித்து வரவேண்டும்.

## முழு உரிமை இல்லை :

இம் முறைப்படி நிலத்தை வாங்கியவன் நிலத்தின் மீது முழு உரிமையைப் பாராட்ட முடியாது போன்று தெரிகிறது. நிலத்தில் கிடைக்கும் வருமானத்தை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளலாம் அவ்வளவுதான். நிலம் வாங்கிய பிறகு முதல் ஐந்து ஆண்டுகள் அவன் அந்நிலத்தைச செம்மைப் படுத்துவதற்காக மிகவும் குறைந்த அளவில் கோயிலுக்குப் பங்கு செலுத்துகிறான். பின்னர் ஒரு நிலையான அளவு பங்கு செலுத்த வேண்டியவனாகக் காணப்பெருகிறான்.

## பண்டைய மக்களின் நுண்ணறிவு :

இவ்வாறு பல முறைகளில் மிகுந்த பாதுகாப்பான முறையில் நில விற்பனைகள் நடைபெற்றிருக்கின்றன. இவை அனைத்தும் அக்கால மக்களின் நுண்ணிய அறிவுக்கும், முறையான வாழ்வுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன.

○

## கொங்கு

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 3—50 |
| மூன்றுண்டுக் கட்டணம் | ரூ. | 10—00 |
| ஆயுட் கட்டணம் | ரூ. | 100—00 |

## தேனோலை

[பழஞ்சுவடிக் காலாண்டிதழ்]

முதல் இதழ் ஜுலை முதல் நாள் வெளியிடப்படும்

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 4—00 |
| மூன்றுண்டுக் கட்டணம் | ரூ | 10—00 |
| ஆயுட் கட்டணம் | ரூ. | 100—00 |

## இலங்கையில்

| | | |
|---|---|---|
| இரண்டிற்கும் ஆண்டுக் கட்டணம் | ரூ. | 5—00 |

தொகை அனுப்பவேண்டிய முகவரி ;

**M. சச்சிதானந்தம்,**

"பத்மனகம்" சங்காணை, இலங்கை.

## 31. உணத்தலும் உலர்த்தலும்

சில வட்டாரங்களில் துணியைக்காயவைத்திடற்கு 'உணத்துதல்' என்ற சொல் வழக்கிலுள்ளது இதைத்தவறென்று எண்ணிச்சிலர், உலர்த்துதல்தான் செப்பமான சொல்லென்றும், உணத்துதல் கொச்சைச் சொல்லென்றும், எண்ணுவர். உலர்த்துதல், உணத்துதல் இரண்டுஞ் சரியே.

" உள்' என்ற தென் சொல்லின் திரிபுதான் ' உஷ் ' என்ற வட சொல்.

உல்-உள்-உண்-உண்ணம்—வெப்பம். அதாவது, உஷ்ணம் என்ற வடசொல்லின் தொன்மையான வடிவம் உண்ணம் என்பதுவே.

உல்-என்ற அடிவேருடன் 'அர்' சேர்ந்து உலர் என்கிறது. அடுத்து,

உள்-உண்-உண-உணத்துதல்-காய்தல்,

## 32. இலக்கம்

' லக்ஷம் ' என்று சமஸ்கிருதத்தில் கூறப்படும் பேரெண் தமிழில் இலக்கம் என்றே வழங்குதல் வேண்டும். ஆயின் சிலர் முன் மொழிந்த வட மொழிச்சொல்லை எழுத்துப்பெயர்ப்புச் செய்து ' லட்சம் ' என்றும் ' இலட்சம் ' என்றும் வழங்குகின்றனர். அவை பிழையே.

இலக்கம் என்றால் பெரிய எண் என்று பொருள்,

இலக்கம்-எழுத்து எண், குறி-எண்; இலக்கம் என்ற எண்ணே முன் தோற்றிற்று. இராச ராசசோழனது கல்வெட்டு, ' இரட்டபாடி ஏழரையிலக்கமும் " என்று குறிக்கின்றது. மேலும், தக்கயாகப்பரணியிலும், குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழிலும் இலக்கம் என்ற சொல் கையாளப்பட்டிருக்கிறது.

'இலக்கம் என்ற எண் தோன்றிய பிறகே கோடி [Crore] என்ற எண் தோன்றிற்று. கோடி என்றால் கடைசி [எண்] என்று பொருள்.

எனவே இனியேனும் பிழைபட்ட வடிவங்களான 'லக்ஷம், லட்சம், இலட்சம்' என்பனவற்றை விடுத்து பன்னெடுங்காலங் களுக்கு முன்பே கல்லில் பொறிக்கப்பெற்ற இலக்கம் என்ற தொன்மை வாய்ந்த சொல்லைத் தப்பாது பின்பற்றல் நன்றாம்.

## 33. உழைப்பும் படிப்பும்

படிப்பு என்பது வேறு, உழைப்பு என்பது வேறு. படிப்ப[த்த]வர்கள் உழைக்க வேண்டியதில்லை, உழைப்பவர்கள் படிக்கத்தேவையில்லை என்ற எண்ணம் தமிழ்நாட்டில் பரவலாகக் காணப்படுகிறது. இவ்வெண்ணத்தை ஓரளவு களையவே, கோவைக்கடுத்த துடியலூரிலுள்ள கொங்கு நாட்டுக் கலைக்கல்லூரியில் படிப்பினூடே உழைத்து ஊதியந் தேடவேண்டுமென்கிற முறையிலே ஒரு திட்டத்தைக் கொணர்ந்து மும்மரமாகச் செயல்படுத்தியும் வருகின்றனர். காலை 8-30 மணி முதல் மாலை 1-30 மணிவரைப் படிப்பு, பின் அண்மையிலுள்ள தொழிலகங்களில் பகுதி நேரப் பணி. இதனால் மாணவர்களுக்குச் செலவுக்குத் தொகை கிடைப்பது மட்டுமின்றி, உழைத்து உடலையும் உள்ளத்தையும் உறுதியாக்கிக் கொள்ளவேண்டுமென்கிற உள்ள உணர்வும் எழுகின்றது. இத்திட்டத்தை எல்லாக் கல்லூரிகளிலும் உடன் செயலுக்குக் கொணருதல் வேண்டும். மேலும் உயர்நிலைப் பள்ளிகளில் கூடக் கொணர்ந்தால் மிக நன்றாகயிருக்கும்.

## 34. புலியூர்

தமிழர்கள் மறவுணர்வு மிக்க புலியை மிகவும் விரும்பி, பல ஊர்களுக்குப் புலியூர் என்றே பெயரிட்டனர். இக்கால் திருமுதுகுன்றத்திற்கு [விருத்தாசலத்திற்கு] அண்மையிலுள்ள இராசேந்திரப் பட்டினம், பண்டு எருக்கத்தம்புலியூர் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. அத்தம்- காடு. புலிகள் தங்கி வாழ ஏந்தாக [வசதியாக] எருக்கஞ்செடி காடு போல வளர்ந்திருந்ததாம். அதனாற்றான் அப்பெயர் பெற்றது.

திருச்சி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், குறும்பலூர் என்ற ஊர்களின் பெயர்கள் பெரும்புலியூர், குறும்புலியூர் என பதன் திரிபேயாம்.

# நடுகல் வழிபாடு - 3

புலவர் **செ. இராசு**

திருநாதர் குன்றில் சத்திரநந்தி என்ற சமணத்துறவி 57 நாள் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்தமைக்கு நிசீதிகை (கல்) நினைவாக எடுங்கப்பட்டது. 44 திருச்சி. கழுகுமலை போன்ற இடங்களிலும் இது போன்ற கற்கள் இருக்கின்றன. 45

இவ்வாறு சல்லேகனை (வடக்கிருத்தல் போல) விரதமிருந்து உயிர் நீத்த சமணசமயப் பெண்பால் துறவியர்கட்கும் (இவர்கள் ஆர்யாங்களை-குரத்தியர் எனப்படுவர்) நிசீதிக்கைக்கல் நாட்டப் பட்டது.

கோயமுத்தூர் மாவட்டம் ஈரோடு தாலுக்கா விஜயமங்கலத்தில் உள்ள சமணக்கோயிலான ஸ்ரீசந்திரப்பிரப தீர்த்தங்கரர்கோயிலான ஸ்ரீ வீரசங்காதப் பெருப்பள்ளியில் கங்க அரசனின் தளபதியும், கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் சிறப்பு வாய்ந்த சிரவணபெள குளம் கோமடேஸ்வரர் சிலையைச்செய்தவனுமான ஸ்ரீசாமுண்டராயனின் தங்கை புளியம்மை நிசிதீகை கல்'' என்ற பழங் கல் வெட்டு அங்கு இன்றும் உள்ளது. 46

திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தில் கிழக்குக்கோபுர வாயில் அருகே நட்ட கல் உள்ளது என மெக்கன்சி குறிப்பில் ஒரு கல்வெட்டு குறிப்பிடப்பெறுகின்றது. கோயில் பூசை சரியாக நடக்காத பொழுது அது சரியாக நடக்கவேண்டும் என்பதற்காக ஒருவர் கோபுரத்தின் மேலேறிக் கீழே விழுந்து தற்கொலை செய்துக் கொண்டார். அக்கல்லில் இக்கல்வெட்டும் அவர் சிற்பத்தையும் வடித்துள்ளார்.

'' சுப மஸ்து செளமியவருடம் தை மாசம்
நாலாந் தியதி வெள்ளிக்கிழமை நாள்
ஸ்ரீ ரங்கநாத ச்வாமிக்கு படித்தரம்

---

44. கொங்கு 2 பக். 233
45. கல்வெட்டுகளால் அறியப்பெறும் உண்மைகள் 1
46. ஆய்வுத்தேன் பக். 27

ஒன்றும் நடத்தாமல் மிக அன்னி
யாயம் பண்ணுகையில் பொறுக்க
மாட்டாதே இந்தத் திருக்கோபுரத்தில்
ஏறி விழுந்து யேறந்த காலம்
யெடுத்த அழகிய மணவாள தாசன்
ஸ்ரீ கார்யம் அப்பாவையங்கார்' இவ
ருக்கு ச்வாமி யெக்காளைகள் திருத்
தேர் புறப்பாடு முதலான அறிய
வரிசைகளையும் பிரசாதித்தருளி பிரம்ம
மெத சமஸ்காரம் பண்ணுவித்தருளி முழுப்
படித்தரம்கொண்டருளினார் இப்படி
நடந்து வந்து முழுப்படித் தரத்திற்கு
விரோதம் பண்ணினவன் ரெங்கத் துரோகி
யாய் போகக்கடவன். அனுகூலம்
பண்ணினவன் ஸ்ரீலக்ஷ்மி பரிபூர்ண
கடாக்ஷ பாத்திரஸ்தனாக யிருக்கடவன் " 47

அரகண்ட நல்லூரில் ஒரு கோயில் மண்டபம் இடையூறின்றிக் கட்டப்பட பொன்னாண்டி என்ற தேவரடியாள் மகன் இளவெண் மதிசூடி தன்னைப் பலியிட்டுக்கொண்டான் தெலுங்கு நாட்டில் இப்படிப்பட்ட கற்களை" நெத்ருப்பட்டு '' என்று வழங்குவர். 48

## சதி நடு கற்கள் ;

கற்புடைய பெண்களுக்கு நாட்டப்படும் நடு கல்லை மகா சதிக்கல், மாலதிக்கல். மாஸ்திக்கல். சதிக்கல் என்று வழங்கு கின்றோம். (கண்ணகிக்குச் செங்குட்டுவன் எடுத்தகல் இவ்வகை யானதே) 49

கன்னட நாட்டுப் பகுதியில் இவை அதிகம் கொங்கு நாட்டில் வட மேற்கு எல்லைகளில் இவை கிடைக்கின்றன. இவற்றில் பெரும் பாலும் உருவம் இருப்பதில்லை. தோளுடன் கூடிய ஒரு கையே காணப்படும். சிலவற்றில்தான் எழுத்துக்கள் காணப்படுகின்றன.

உடன் கட்டை. ஏறுதலாகிய தீப்பாய்தலைக் கன்னடத்தில் 'தோள் சொடுத்தல்' என்றே குறிப்பர். சககமனம் அனுமரனம் என்றும் குறிப்பர். இக்கற்களை "வியாபர்ன தோளு கல்லு "என்று கூறுகின்றனர், 50

---

47. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் 2: 783
48. சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள் பக். 44
49. 'நான் கண்ட நடுகற்கள்' —புலவர் செ. இராசு
50. செந்தமிழ் தொகுதி—3

புறநானூற்றில் பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு தீப்பாய்ந்ததையும், 51 மணிமேகலையில் ஆதிரை தீப்பாய முயன்றதையும் காணுகின்றோம். உடுமலைப்பேட்டை, தாலுக்காவில் கொழுமம் தாண்டவேசுரர் கோயில் கல்வெட்டில் வீரசோழன் மனைவி சோழமாதேவி தீப்பாய்ந்ததையும், 52 இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் மனைவி வானவன் மாதேவி கி. பி. 969-ம் ஆண்டு தன்கணவனுடன் உடன் கட்டையேறிய செய்தியையும் வரலாற்றில் காணுகின்றோம்.

'; செந்திரு மடந்தைதன் சீராஜ ராஜன்
இந்திர சமானன் இராஜசர் வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவனும்
தலைமகன் பிரியாத் தையல் நிலைபெறும்
தூண்டா விளக்கு ......................
......................மணிமுடி
சுந்தர சோழனின் மந்தர தாரன்
திருப்புயம் முயங்கும் தேவி'

என்று மெய்க்கீர்த்திப்பகுதி பார்ப்பவர்களை உருக்கும் தன்மையன

' வீரபிரதாப மகா ராயர் பிருத்விராஜ்யம்
செய்திருக்க சகவருஷம் 1339 ஆவது
ஹேவிளம்பி சம்வத்சரத்து பாத்திர
பத சுத்த பஞ்சமி ஸ்ரீ சகலாட்ச
புரத்தும் ரெ...........மகன் புக்கரன்
ஸ்வர்க்கத்தன் ஆனதில் அவன்
பெண்டாட்டியர் மூவர் தோளும்
கையும் கொடுத்த கம்பம் ', 54

51. புறநானூறு—246
52. தென்னிந்தியர் கோயில் சாசனங்கள் 1
53. பிற்கால சோழர் சரித்திரம் 1 : 87
54. செந்தமிழ் தொகுதி 3

வீரர்கள் சுவர்க்கம் புகுவர் என்று புறநானூற்றுப் புலவனும் கூறுகிறான். 55

கடத்தூர் நடுகல் கல்வெட்டு (தருமபுரி மாவட்டம்)

"ஸ்வத்தி ஸ்ரீ சார்வ பௌம சக்ரவர்த்திகள்
ஸ்ரீ போசாள வீர ராமனாத தேவர்க்கு
யாண்டு 33-ஆவது ஆடிமாதம் பதி
னேழாம் தியதி மகத்தினன்று
கடத்தூர் நாட்டு நாயஞ்செய்
வான் ஆரொத்தான் இருக்கன்
பெருமாள் மகன் ஆண்பிள்ளைப்
பொருமாள் புலியைக் கொன்று
வீர ஸ்வர்க்கம் பெற்றான்" 56

## வீடு பேற்று நடுகல்;

இவ்வாறு வீரன் வீரசுவர்க்ம் அடைவதைக் காட்டும் நடுகற்கள் மூன்று நிலையாகச் சில இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும்.

கீழ்நிலையில் போர்க்காட்சியும், இரண்டாம் நிலையில் மனைவியருடனும், மேல் நிலையில் தேவமாதர் வரவேற்பதையும், வீரன் சுவர்க்கம் புகும் காட்சியும் இருக்கும். அவள் சமயத்துக்கு ஏற்றவாறு சிவன் அல்லது விஷ்ணுவின் சிற்பம் மேல் நிலையில் இருக்கும்.

## பொதுப்பணி நடுகற்கள் :

கன்னட நாட்டுப் பகுதியில் குளங்களைத் தோண்டியும் கால்வாய் வெட்டியும் மக்களுக்கு நன்மை செய்தவர்களுக்கும் நடுகல் உள்ளன. கோவை மாவட்டம் ஈரோடு தாலூக்காவில் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் 56½ மைல் நீளமுள்ள கால்வாயை வெட்டினான். ஒரு வீரன் : அவன் பெயர் காலிங்கராயன். அவன் கட்டிய அணையில் அவனைச் சிலையாக வடித்து வணங்கினர் முன்னோர், அதனை காலிங்கராயன் வம்சாவளி கூறுகிறது.

"காலிங்கக் கவுண்டன் கட்டியிருக்கப்
பட்ட அணையிலே கவுண்டனை சிலா
பிரதிமை ரூபமாகக் கல்வெட்டி வச்சு

55. புறநானூறு 260, 287
56. கொங்கு 2 : 256

சிலா சாசனமும் எழுதி
யிருக்கிறது. அந்த அணை போட்டு
இருக்கப்பட்ட இடத்தில் குடிகள்
வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக்
கொண்டு வருகிறது'' 57

பாண்டி நாட்டில் ஒரு ஏரியைக் காத்த பெருமகனுக்கு நடுகல் நாட்டி அவன் மகனுக்கு 'உதிரப்பட்டி' மானியம் கொடுத்தனர். உதிரப் பட்டி மானியத்தைச் சோழன் பூர்வபட்டயம் 'ரத்தக்காணி' என்று கூறும்.

'' குலைசேகர தேவ
ர்க்கு யாண்டு 34-வ
துக் கருங்குளத்திர்க்
கு ஒரு பழிஉண்
டான படியாலே
இப்பழிக்கு இவ்வூர்
குடும்பரில் பெரிய
தேவப்பள்ளன் அணை
வெட்டிப் போகையா
லெ இவன் மகளுக்கு
ஊரார்க ளிட்ட உதி
ரப்பட்டி குடுத்தபடி தபான
வ நிலம் அரை மா அணை
நிலம் சந்திராதித்தவல்
மானி போவிப்பார்
கா...............

என்பது முதுகுடி நடுக்கல்லில் கண்ட வாசகம். 58

தலைவனைக் காத்த 'கோவிவன்' என்ற நாய்க்கும் நம் முன்னோர் நன்றி யுணர்வுடன் நடுகல் நாட்டியுள்ளனர்.

(அடுத்த இதழில் முடியும்)

---

57. காலிங்கராயன் வம்சாவளி அரசினர் சுவடிச்சாலை டி. 3044
58. கொங்கு 2 : 301
59. செங்கம் நடுகற்கள் 11

# எழுத்துச் சீர்மையில் உகர ஊகார வடிவங்கள்

டாக்டர் சாலை இளந்திரையன்
டாக்டர் சாலினி இளந்திரையன்

தமிழ் நெடுங் கணக்கில் உள்ள சில குழப்பங்களில் உகர, ஊகார உயிர்மெய் எழுத்துக்களைப் பற்றியதும் ஒன்று. உகர வரிசைக்கு (எல்லா எழுத்துக்களுக்கும்) ஒரே குறியீடும் ஊகார வரிசைக்கு ஒரே குறியீடும் அமைந்தால், இந்த உயிர்மெய் வரிசையில் உள்ள குழப்பம் தீர்ந்துபோகும். படிக்கும் குழந்தைகளும்; புதிதாக தமிழ் பயிலும் பிற மொழியினரும் எளிதாகப் படிப்பார்கள்; தட்டெழுத்து மற்றும் அச்சகத்திலும் பல எழுத்து வடிவ வார்ப்புகள் குறையும்.

இதை அமைக்கப் புறப்படும்போது, பலர் பல ஆலோசனை களை சொல்லுகிறார்கள். அவைகளில் உகரத்துக்கு ு என்ற குறியையும் ஊகாரத்திற்கு ூ குறியையும் பயன்படுத்தலாம் என்பதே எங்கள் கருத்து'

சிலர் தவறாக நினைத்துக்கொண்டு இருப்பது போல, இவை வடமொழி எழுத்துக்களல்ல; வடமொழி ஒலிகளைத் தமிழில் சொல்லும்போது பயன்படுத்தப்பட்ட ஸ, ஹ, க்ஷ, ஷ, ஜ என்னும் எழுத்துக்களோடு தமிழர்கள் புதிதாக அமைத்துப் பயன்படுத்திய குறிகளே இவை. ஸ, ஷ முதலியவை வேற்று மொழி ஒலிகள் என்று காட்டுவதற்காகவே அந்தக் காலத்தில் அவைகளுக்குத் தனி (ு ூ) குறியீடுகளை அமைத்தார்கள். இப்போது இத்தகைய வேறுபாடுகளை அகற்றி ஒருமை காணும் நோக்கிலேயே உலகம் செல்கிறது. எல்லா மொழிகளுக்கும் 'உலக மொழி நெடுங்கணக்கு' ஒன்று தேவை என்று சிந்தனை கூடப் பரவலாக ஏற்பட்டுவரும் காலம் இது.

இந்த எழுத்துக்களை வழக்கத்திற்குக் கொண்டுவருவதில் புதிய சிக்கல் ஏற்படாது: ஏற்கனவே பள்ளிகளில் இந்தக்குறிப்பீடுகளைக் கற்பிக்கிறோம்.: அச்சகங்களிலும் தட்டெழுத்திலும் இந்த குறியீடுகள் கையாளப்பட்டு வருகின்றன. ஆகவே புதிய மருட்சி, திகைப்பு, பணச் செலவு என்ற பேச்சுக்கு இடமில்லை.

இந்தக் காரணங்களால் தமிழின் உகர, ஊகார உயிர்மெய் வடிவங்களைக் குறிப்பதற்கு முறையே ு, ூ என்னும் குறிகளையே

பயன்படுத்தலாம் என்று கறுதுகிறோம். மொழி என்பது எல்லோருக்கும் உரிய பொதுச் சொத்து. அதிலே ஏற்படும் மாறுதல் அவரவர் சம்மதியிலுமே நடைபெற வேண்டும். தமிழ்ப் பொதுமக்கள் இந்தக் குறியீடுகளில் பயன்பாட்டுக்கு அத்தச் சம்மதி பெறவேண்டும் என்று விரும்புகிறோம். தருவார்கள் என்று நம்புகிறோம்.

குறிப்பு: நமது வேண்டுகோளுக்கிணங்க பலர் தத்தம் விருப்பத்தினை எழுதியுள்ளனர்.

இது பற்றிக் கருத்தினைச் செலுத்தாத பிறரும் தங்கள் கருத்துகளைக்கூற வேண்டுகிறோம். எழுதுங்கள்.

(1) ¬ ௐ : தெர¬க்கௐத்து

(2) ζ ஃ : அடζப்பஃதி

(3) ỏ ỏ : நடỏக்கỏடம்

---

## கொங்கு தொல்லெழுத்து வரிசை:

# சூரநத்தம் கல்வெட்டு

அமைவு. தருமபுரி மாவட்டம அரூர் வட்டம் கோட்டைப் பட்டிக்குத் தெற்கில் உள்ள சூரநத்தம் கிராமத்திற்குச் சிழக்கில் ஆற்றங்கரையில் உள்ள ஒரு சதுரமான பலகைக் கல்லின் இரு பக்கங்களில் உள்ளது. இப்பலகைக் கல்லின் நடுவில் வட்டமான துளை உள்ளது. கல் இரண்டாக உடைந்து ஒரு பகுதி மட்டும் உள்ளது. மறுபகுதி சிடைக்கவில்லை.

மொழி. தமிழ்.
காலம் : ஸ்ரீ வீரராசேந்திர சோழன் காலம்.
கன்டுபிடித்தவர். புலவர். புது. போ. வேங்கடரார்மன்.
வாசகம் :

முன்பக்கம் :
1. ஸ்வஸ்தி
2. ஸ்ரீதிரிபுவன
3. ச்சக்கரவர்த்திக
4. ள் ஸ்ரீவீரராசேந்
5 சேந்திர சோழதேவற்
6. கி யாண்டு 17.
7. ஆவது

பின்பக்கம் :
8. நாயனார் வா
9. ணவ தரைய
10. ர் வன் னெஞ்ச
11. ப் பெருமாள் திரு
12. மேனி கல்லி
13. யாண திரு மே
14. னியாக வே
15. ணு மென்று.

கல்வெட்டு முடியவில்லை. மற்ற பகுதியில் இருக்கலாம்.

---

# முகவை

கொங்கு சூன் இதழ் கலவை (25) யில் முகவை பற்றிய குறிப்பு வெளியாயிற்று. அது தொடர்பாக சூலை இதழில் **159-ஆம்** பக்கத்தில் ஒரு வாசகர் நோக்கு வெளியாயிற்று. எழுதியவரின் பெயர் விடுபட்டுப் போய்விட்டது. அதை எழு தியவர் திரு,த.மு. சுப்பிரமணியம் அவர்கள். தமிழ் வளர்ச்சி இயக்கத்தில் பணியாற்றுகிறார்.

இதுபற்றி முகவை. இராசமாணிக்கம் அவர்கள் தமது கருத்தினை இங்கு கூறுகிறார். முகவையில் பிறந்து அதைப் பிரபல மாக்கியவர்; நல்ல சொற்பொழிவாளர்.

—ஆசிரியர்

'தமிழ் கண்டதோர் வைகை' என்று பாரதி பாடிய வைகை நதியில், ஞானசம்மந்தரது தமிழ்த் தேவார ஏடு எதிர்த்துச்சென்று கரையேறியதால், வேகவதி என்றும் வைகை பெயர்பெறலாயிற்று, அத்தகைய வைகை (தமிழும் தெய்வீகமும் கலந்தஆறாதலால்) பொய் சொன்ன கடலோடு கலக்க முடியுமா ?

சிவனது, அடிமுடிவைக் கண்டதாக பொய் சாட்சி சொன்ன பிரம்மா, தாழம்பூ, கடல் ஆகிய மூன்றுக்கும் தண்டனை கிடைத்தது. பிரம்மாவுக்கு பூவுலகில் கோவில் கிடையாது. தாழம்பூ அர்ச்சனைக்கு உரியதாக்கப்பட வில்லை: திருவாட்சியில் அலங்காரமாகத் தான் வைக்கப்படும். முன்னவை இரண்டும் முடிவைக் கண்டதாகப் பொய்சொன்னவை. கடலோ, அடியைக் கண்டதாகப் பொய் கூறிற்று. ஆகவே, அது அபிஷேகத்துக்குப் பயன்படுத்தப்படுவதில்லை.

ஆகவேதான்; வைகை நீரை, இராமநாதபுரத்திற்கு மேற்கே உள்ள பெரிய கண்மாயில் வாங்கி ஒன்பது கலுங்கு வழிய சக்கரைக் கோட்டைக் கண்மாயில் நிரப்பி, அதன்பின் திருப்புல்லணைக்கடலில் தெற்கே சங்கமமாக்கி வருகிறோம், ஆக, வைகையின் முகமாக இராமநாதபுரம் ஆகவே முகவை என்ற பெயர் பெறலாயிற்று.

இதைக் குறிக்கவே இராமநாத புரத்திலுள்ள சேதுபதி அரண்மனையில் மேற்கு பக்கத்திலுள்ள ஊருணிக்கு முகவை ஊருணி என்றே வழங்கி வருகின்றோம், ஒயிலாடுபவர்கள் சேதுபதி புகழ்பாடும்பொது,

"சேதுபதிபோலுண்டோ—தென் முகவை நகர்
சேதுபதிபோலுண்டோ!..."

என்று பாடி வருகின்றார்கள்.

1907 வரை சப்மாஜீஸ்ட்ரேட் பதவியிலிருந்த வேலுச்சாமி சேர்வை என்ற அஞ்சாநெஞ்சனைப் புகழவந்த ஒரு கவி,

"வேலனொரு வேங்கை மரமாகி நின்றான்—இவன்

வேங்கையைப்போல் முகவைதளில் வீரங்கொண்டான்..."

என்று பாடியுள்ளார்.

பாண்டித்துரைத்தேவர் பன்னூற்திரட்டு என்ற நூலிலும், மகாவித்வான் ரா. ராகவையங்கார் 'சேது புராணம்' என்ற நூலிலும், மகாவைத்தியநாதய்யர் இயற்றியுள்ள 'ராஜராஜேஸ்வரி' கீர்த்தனையிலும் 'முகவை' என்று வழங்கப்பட்டுள்ளதற்கு, நான் மேலே குறிப்பிட்டதுதான். காரணப் பெயராக அமைந்திருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

அதுகுறித்தே இராமனாதபுரத்தில் பிறந்தவனாகையால், 1929 தொடங்கி மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நான் படித்தகாலை என் புனைப் பெயரை 'முகவை' என்று வைத்துக்கொண்டேன். அதன் பிறகு இப்பெயர் அம்பலத்துக்கு வந்துள்ளது.

—முகவை இராஜமாணிக்கம்


சிதம்பரம்

# மணிவாசகர் நூலகத்தின் சிறந்த நூல்கள்

| | ரூ. | | ரூ |
|---|---|---|---|
| கம்பர் | 4—00 | பரிபாடல் திறன் | 6—00 |
| இலக்கிய விளக்கம் | 3—00 | நுண் கலைகள் | 3—50 |
| உப்பங்கழி | 4—00 | உரையாசிரிர்கள் | 15—00 |
| ஒரு நொடியில் | 4—50 | இலக்கியத் திறனாய்வு | 7—00 |
| மாணிக்க விருந்து | 7—00 | சிற்றிலக்கியச் செல்வம் | 4—00 |
| கம்பர் விருந்து | 3—50 | உலகப்பெருங்கவிஞர்கள் | 3—00 |
| கவி பாடலாம் | 6—00 | காப்பியத்திறன் | 3—50 |
| வீரர் உலகம் | 8—50 | மும்மணிகள் | 3—00 |

# அறிஞர்களின் பிறப்பியல்

க. மு. நடராசன் M. Sc. பூண்டி

அண்மையில் ஒன்றிய நாடுகள் பேரவை (United Nations) நடத்தி இருக்கும் ஒரு சில ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகள் இன்றைய மரபு வழிப் பண்பியலாருக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. எனலாம் அவ்வாராய்ச்சிப்படி தலை சிறந்த உலக அறிஞர்களிலே 70 சதவிகிதம் பேர் அவர்களுடைய தந்தைமார்களுக்கு 30லிருந்து 50 வயதான காலங்களிலும் தாய்மார்களுக்கு 29 வயது அடையாத காலங்களிலும் பிறந்திருக்கின்றனர். இதே புள்ளி விபரக் கணக்கை உருசிய விஞ்ஞானிகள், அலெக்சாகினும் தசென்கோவும் பல்வேறுகாலங்களில் வாழ்ந்திருந்த விஞ்ஞானிகள், கலைஞர்கள், அரசியல்வாதிகள், இலக்கிய அறிஞர்கள் போன்றவர்களின் வாழ்க்கைக்கும் விரிவுபடுத்தியிருக்கிறார்கள். உலக அறிஞர்கள் பலருடைய பிறப்பின்போது அவர்களுடைய தந்தை, தாய் வயது காண்க:

| | தந்தை வயது | தாய் வயது | | தந்தை வயது | தாய் வயது |
|---|---|---|---|---|---|
| லியனார்டோடாவின்சி | 25 | 22 | பைரன் | 33 | 23 |
| சார்லஸ் டிக்கன்ஸ் | 27 | 23 | மார்க் டுவைன் | 36 | 22 |
| அலெக்சாண்டர் புஷ்கின் | 29 | 24 | ஜோலியட் கியூரி | 38 | 30 |
| நீல்ஸ் போஃர் | 30 | 24 | என்ரிக்கோ பெர்மி | 44 | 30 |
| ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் | 32 | 21 | பெர்னாட்சா | 45 | 28 |
| பெதோவன் | 32 | 22 | ஜாக் லான்டன் | 53 | 29 |
| கோதே | 39 | 17 | அலெக்சாண்டர் பொரோடின் | 59 | 24 |
| | | | கன்பியூசியஸ் | 70 | 16 |

மேற்குறித்த அறிஞர்களிலே ஏறத்தாழ 41 சதவிகிதம்பேர் தங்களுடைய தந்தையரின் வயது 30-லிருந்து 40 வரைக்கும், 27 சதவிகிதம் பேர் 40-லிருந்து 50 வரைக்கும் உள்ள காலங்களில் தோன்றியிருக்கிறார்கள். பொதுவாக 37—39 வயது வந்த தந்தயர் அறிவுள்ள சந்ததிகளைத் தரும் வாய்ப்பு அதிகம்.

ஆகவே, பெற்றோர்களின் அனுபவ முதிர்ச்சிக்கும் சந்ததிகளின் அறிவுத் திறனுக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது. என்பது பெறப்படுகிறது. ஆதிகால கிரேக்கத்திலும் கூட மனிதன் 40-வது வயதில்தான் வாழ்வின் உச்ச நிலையை அடைகிறான் என்றும் நம்பி வந்தார்கள். இதனை உருசிய விஞ்ஞானி கியோடாகியான் ஒப்புக் கொள்கிறார். அவருடைய கொள்கைப்படி, ஆண்கள், தாங்கள் அனுபவ வாயிலாகப் பெற்ற குணங்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு வழங்குகிறார்கள். பெண்களோ தங்கள் வமிசத்தில் தொன்றுதொட்டு வரும் குணங்களின் இருப்பிடமாகமட்டும் அமைந்துவிடுகிறார்கள். அவர்களுடைய வாழ்வின் அனுபவத்திற்கும் பிள்ளைகளின் அறிவுத்திறனுக்கும் தொடர்பே இல்லை எனலாம். இக்கோணத்தில் பார்க்கும்போது ஆண்கள் தங்களுடைய திருமணவயதை குறைந்தது பல ஆண்டுகளுக்காவது ஒத்திப்போடவேண்டும்! ஏறத்தாழ 35 வயதில் திருமணம் செய்தால்தான் அறிவுள்ள சந்ததியினரைப் பெறமுடியும்! ஆனால் பெண்களுக்கு அவ்வாறில்லை. 18 வயதிலிருந்தே அவர்கள் மண வாழ்க்கைக்கு ஆயத்தமாகலாம்!

# பொங்கி மகிழ்ந்திட

உணவு உற்பத்தியில் தன்னிறைவு!

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்க இளைஞர் அணி!

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம்!

குடிசைகளுக்குப் பதில் மாடி வீடுகள்!

மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமை நீங்கிட

கைரிக்‌ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்‌ஷாக்கள்!

இவை தமிழ்நாடு அரசின் சாதனைகளில் சில

இதேபோல்

நீங்களும் கடினமாக உழைக்கிறீர்கள்!

நிறைவாக வருவாய் பெறுகிறீர்கள்!

ஆயினும்

நாடும் வீடும் பொருளாதாரத்

தொல்லைக்கு ஆட்படுகின்றன!

காரணம் என்ன?

நாளுக்கு நாள் பெருகிடும்

மக்கள் தொகையே இதற்குக் காரணம்!

எனவே?

செழித்திடும் நன்மைகளை


நாட்டில் நிலைத்திடச் செய்ய

நாடும் வீடும் பொங்கி மகிழ்ந்திட

அமையுங்கள் அளவான குடும்பம்!

குடும்ப நலத்துறை

தமிழ்நாடு அரசு




போன் : 431200 — 432926 — 43115 — 431650

ஆசிரியர் : புலவர் செ, இராசு
அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி
ரேணுகா பிரிண்டர்ஸ், சென்னை-600020.
வெளியிட்டவர் : ச. பிரகதம்
அலுவலகம் : 26, இந்திரா நகர், சென்னை-600020.